ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1905/4 - 2015 මාර්තු මස 09 වැනි සඳුදා - 2015.03.09

*1905/4 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு

அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (1) (அ) உப உறுப்புரையின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் 2015, சனவரி மாதம் 18 ஆந் திகதிய 1897/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலானது கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகின்றதென்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*மைத்திரிபால சிறிசேன*
*சனாதிபதி*

*சனாதிபதி அலுவலகம்*
*கொழும்பு 01*
*2015, மாச்சு 06*

**அட்டவணை**

*(1) அவ்வறிவித்தலில் மக்கள் ஒழுங்கு, அனர்த்த முகாமை மற்றும் கிறித்தவ மத அலுவல்கள் அமைச்சர் (இல. 4) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-*

*(அ) அதன் நிரல் I இல் காட்டப்பட்டுள்ள 18 மற்றும் 19 ஆம் விடயங்களுக்குப் பதிலாக பின்வரும் விடயங்களைப் பதிலீடு செய்வதன் மூலம்:*

*18. ஆட்களைப் பதிவு செய்தல்*
*19. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும்*
*20. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களின் மேற்பார்வை*

*(ஆ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 8 ஆவது விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம் :*

*9. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்*

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(இ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள (2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க) இலங்கை அனர்த்த முகாமைச் சட்டம் என்ற விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம் :

* (1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க) ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டம்

(2) அவ்வறிவித்தலில் உள்நாட்டலுவல்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சர் (இல. 5) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் I இலுள்ள 3 ஆவது விடயத்தை நீக்குவதன் மூலம்

(ஆ) அதன் நிரல் II இலுள்ள 3 ஆவது விடயத்தை நீக்குவதன்மூலம்

(இ) அதன் நிரல் III இலுள்ள (1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க) ஆட்களைப் பதிவு செய்தல் சட்டம் என்ற விடயத்தை நீக்குவதன் மூலம்

(3) அவ்வறிவித்தலில் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் (இல. 6) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :

(அ) அதன் நிரல் I இலுள்ள 2 மற்றும் 4 ஆம் விடயங்களை நீக்குவதன்மூலம்

(ஆ) அதன் நிரல் I இலுள்ள 3, 5, 6 மற்றும் 7 ஆம் விடயங்களுக்குப் பதிலாக பின்வரும் விடயங்களைப் பதிலீடு செய்வதன்மூலம் :

2. உணவு மற்றும் ஏனைய அத்தியாவசியப் பண்டங்களின் விநியோகத்தை உறுதி செய்தல்
3. சாதாரண விலையில் கமத்தொழில் உற்பத்திகளை கொள்வனவு செய்வதை உறுதி செய்தல்
4. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும்
5. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களின் மேற்பார்வை

(இ) அதன் நிரல் II இலுள்ள 6, 8, 9 மற்றும் 10 ஆகிய விடயங்களை நீக்குவதன்மூலம்

(ஈ) அதன் நிரல் II இலுள்ள 7, 11 மற்றும் 12 ஆம் விடயங்களுக்குப் பதிலாக பின்வரும் விடயங்களைப் பதிலீடு செய்வதன்மூலம் :

6. தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம்
7. பிராந்திய பொருளாதார மத்திய நிலையங்கள்
8. நெல் சந்தைப்படுத்தல் சபை

(உ) அதன் நிரல் III இலுள்ள கீழ்க்காணும் விடயங்களை நீக்குவதன்மூலம் :

* (2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்
* (1979 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க) நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்
* கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனச் சட்டம்

(4) அவ்வறிவித்தலில் அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சர் (இல. 8) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் நிரல் I இலுள்ள5 ஆம் விடயத்தை நீக்குவதன்மூலம்
(ஆ) அதன் நிரல் II இலுள்ள 1 ஆம் விடயத்தை நீக்குவதன்மூலம்

(5) அவ்வறிவித்தலில் நிதி அமைச்சர் (இல. 11) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் நிரல் I இலுள்ள 17 மற்றும் 18 ஆம் விடயங்களுக்குப் பதிலாக பின்வரும் விடயங்களைப் பதிலீடு செய்வதன் மூலம் :

17. பதவியணி முகாமை மற்றும் சம்பள விதிப்பு பற்றிய ஆலோசனை சேவைகள்
18. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும்
19. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களின் மேற்பார்வை

(ஆ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 35 ஆவது விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம் :

36. முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம்

37. வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு

(இ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள (2008 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க) சுற்றாடல் பாதுகாப்பு வரிச் சட்டம் என்ற விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம் :

(2008 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டம்

(6) அவ்வறிவித்தலில் சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் (இல. 14) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 24 ஆவது விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம் :

25. வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோச கம்பனி

(7) அவ்வறிவித்தலில் வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சர் (இல. 18) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் II இலுள்ள 15 ஆம் விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம் :

16. தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்

(8) அவ்வறிவித்தலில் சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் (இல. 21) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் I இலுள்ள 8 மற்றும் 12 ஆம் விடயங்களை நீக்குவதன்மூலம் ;

(ஆ) அதன் நிரல் I இலுள்ள 9, 10, 11 மற்றும் 13 ஆம் விடயங்களுக்குப் பதிலாக பின்வரும் விடயங்களைப் பதிலீடு செய்வதன்மூலம் :

8. விளையாட்டு அலுவல்களை ஊக்குவித்தல்
9. விளையாட்டுத்துறை வசதிகள் அபிவிருத்தி
10. விளையாட்டுக் கல்வி
11. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும்
12. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களின் மேற்பார்வை

(இ) அதன் நிரல் II இலுள்ள 9, 10 மற்றும் 11 ஆம் விடயங்களை நீக்குவதன்மூலம் ;

(ஈ) அதன் நிரல் II இலுள்ள 12 முதல் 17 வரையுள்ள விடயங்களுக்குப் பதிலாக பின்வரும் விடயங்களைப் பதிலீடு செய்வதன் மூலம் ;

9. அபேகம
10. விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம்
11. சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகார சபை
12. தேசிய விளையாட்டுத்துறை கற்கை நிறுவகம்
13. தேசிய விளையாட்டுத்துறை மன்றம்
14. விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகம்
15. இலங்கை ஊக்க மருந்து தடுப்பு பிரதி முகவராண்மை

(உ) அதன் நிரல் III இலுள்ள கீழ்க்காணும் விடயங்களை நீக்குவதன்மூலம் :

*தேசிய அருங்கலைப் பேரவை மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்கள் சட்டம்
(1982 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க)
* தேசிய அருங்கலைப் பேரவை மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
(1996 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க).

(ஊ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள "(1999 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) சுகததாச தேசிய விளையாட்டுத்துறை கட்டிடத் தொகுதி அதிகாரசபைச் சட்டம்" என்ற விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம்;

* (2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) விளையாட்டுக்களின் போது ஊக்கமருந்துப் பொருட்கள் பாவனைக்கு எதிரான சமவாயச் சட்டம்

(9) அவ்வறிவித்தலில் கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர் (இல. 23) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் I இலுள்ள 11 மற்றும் 12 ஆம் விடயங்களுக்குப் பதிலாக கீழ்வரும் விடயங்களைச் பதிலீடு செய்வதன்மூலம் :

11. தேசிய அருங்கலைகள் மற்றும் கலைகளின் அபிவிருத்தியும் ஊக்குவிப்பும்
12. இலங்கை கைத்தொழில் உற்பத்திக்கான வடிவமைப்பு அபிவிருத்தியும் விஸ்தரித்தலும்
13. நுகர்வுப் பண்டங்கள் சார்ந்த தேசிய விலைக் கொள்கையை வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும்
14. நுகர்வோர் பாதுகாப்புக்காக நடவடிக்கை எடுத்தல்
15. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும்
16. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களின் மேற்பார்வை.

(ஆ) அதன் நிரல் II இலுள்ள 32 ஆம் விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம் :

33. இலங்கை கைத்தொழில் சபை (லக்சல)
34. தேசிய வடிவமைப்பு நிலையம்
35. தேசிய அருங்கலைப் பேரவை
36. நுகர்வோர் அலுவல்கள் பற்றிய அதிகாரசபை
37. வரையறுக்கப்பட்ட லங்கா சதொஸ
38. வரையறுக்கப்பட்ட லங்கா ஜெனரல் டிரேடிங் கம்பனி
39. கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம்

(இ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள "(1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க) இலங்கை புதிய புத்தாக்குநர் மேம்படுத்துகைச் சட்டம்" என்ற விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம் :

* தேசிய அருங்கலைப் பேரவை மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்கள் சட்டம் (1982 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க)

* தேசிய அருங்கலைப் பேரவை மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (1996 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க)

* (2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்

* (1979ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க) நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்

* கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனச் சட்டம்

(10) அவ்வறிவித்தலில் கல்வி அமைச்சர் (இல. 26) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் நிரல் II இலுள்ள 11 ஆம் விடயத்தை நீக்குவதன்மூலம்

(ஆ) அதன் நிரல் III இலுள்ள (1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டம் என்ற விடயத்தை நீக்குவதன்மூலம்

3- 661

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.